# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 22, 2025

Weekly E-paper • November 22, 2025





## சென்னையில் சிறப்பான
# முற்போக்குப் புத்தகக் காட்சி!

இக்லாஸ் உசேன்

## தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்றக் களமாடும் தி.மு.கழகம்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## பிரதமருக்குக் கேட்குமா?

தலையங்கம்

## தமிழ்நாட்டை நிராகரிக்கும் மோடிக்குக் கண்டனம்!

எழில்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 22, 2025


Weekly E-paper ● November 22, 2025


## சென்னையில் சிறப்பான

# முற்போக்குப் புத்தகக் காட்சி!

**இக்லாஸ் உசேன்**





கடந்த நவம்பர் 8 ஆம் தேதி தொடங்கி 16 ஆம் தேதி வரை நடந்து முடிந்துள்ளது சென்னை முற்போக்குப் புத்தகக் காட்சி.

கருத்தியல் சார்ந்த புத்தக அரங்குகள் மட்டுமே கொண்ட புத்தகக் காட்சியாக இது நடந்து முடிந்துள்ளது.

கிட்டத்தட்ட 35 லட்சம் ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையானதாக மாண்புமிகு துணை முதல்வர் தெரிவித்துள்ளார்கள்.

'கருஞ்சட்டைப் பதிப்பகம்' 5% அளவிற்கான புத்தகங்களை விற்பனை செய்துள்ளது. இந்த 35 லட்சத்தில் சுமார் 25 லட்சத்துக்கும் மேலான கொள்கை சார்ந்த புத்தகங்கள் மட்டுமே இந்தப் புத்தகக் காட்சியில் விற்பனையாகி உள்ளன. பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ், திராவிடம், தமிழ்த் தேசியம் போன்ற கருத்தியல் சார்ந்த புத்தகங்கள் மட்டுமே இந்தப் புத்தகக் காட்சி அரங்குகள் முழுக்க நிரம்பி இருந்தன. அந்த வகையில் இது ஒரு நல்ல கருத்துப் பரப்புரை புத்தகக் காட்சி என்றே குறிப்பிடலாம்.

அந்தக் காலத்தில் திமுக பொதுக்கூட்டம் என்றால் அது மாலை நேரத்தின் பல்கலைக்கழக வகுப்பு போல் இருக்கும் என்பார் பேராசிரியர் சுபவீ அவர்கள். அதேபோல் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் படிப்பு வட்டம் எனும் பெயரில் மிகப்பெரிய அரசியல் விவாதம் கொள்கைகள் சார்ந்த படிப்பு என்று 75ஆண்டுகளாக இயங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகம் இன்று அடுத்த கட்டப் பரப்புரைக்காக ஏற்பாடு செய்த நிகழ்வுதான் இந்த சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி.

இங்கே வெறும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மட்டும் அல்லாமல் குடும்பம், குடும்பமாகப் பொதுமக்கள் பங்கேற்கும் நிகழ்வாக கட்டமைத்துப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வாசகர்கள் வந்து சென்றுள்ளார்கள்.

இப்படிப் பல்வேறு சிறப்புகளோடு மேலும் சிறப்பு சேர்க்கும் நிகழ்வு கண்காட்சி இறுதி நாள் அன்று நிகழ்ந்தது. மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் இருவரும் இறுதி நாளன்று காலையில் புத்தக அரங்குக்கு வருகை தந்தார்கள். பொதுவாகப் புத்தகக் கண்காட்சி அரங்குக்கு வருகை தருவோர் முக்கிய விருந்தாளர்கள் ஒன்று இரண்டு அரங்குகளை பார்வையிட்டு சென்று விடுவார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வர் மற்றும் துணை முதல்வர் இருவரும் 52 அரங்கிலும் சென்று இரண்டு மணிநேரம் பார்வையிட்டுப் புத்தகங்கள் வாங்கிச் சென்றனர். இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் புத்தக கண்காட்சியில் புத்தகம் தேர்வு செய்து வாங்கிய ஒரே முதல்வர் நம் முதல்வராகத்தான் இருப்பார்.

பொதுவாக இந்த ஆட்சி வந்தது முதல் புத்தகக் காட்சி என்பது தமிழ்நாடு முழுக்கத் தொடர்ந்து நடக்கிறது. அதில் சென்னையில் மட்டும்தான் மிகமிகப் பெரியகாட்சி, மற்ற மாவட்டங்களில் நடக்கும் புத்தகக் காட்சிகள் 100 அரங்குகள் இருந்தால் அதில் பெரும்பாலான அரங்குகள் மிகப் பழமையான பதிப்பகமே ஆக்கிரமித்துக் கொள்ளும்.

இந்த நிலையில் துணை முதல்வர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் செயல்பட்ட முற்போக்கு புத்தகக் காட்சி என்பது கருத்தியல் சார்ந்த பதிப்பகங்களுக்கு மிகப்பெரிய ஊக்கம் அளித்திருப்பது

ஒரு நல்ல தொடக்கம்.

திராவிட இயக்கம் மற்றும் கருத்தியல் சார்ந்த புத்தகங்கள் சென்னை மட்டுமல்லாமல் மற்ற அனைத்து மாவட்டங்களில் நடக்கும் புத்தக காட்சியில் இடம்பெறச் செய்வது நன்கு பயனளிக்கும். ●

# தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்றக் களமாடும் தி.மு.கழகம்!

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து



வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் என்கிற பெயரில் லட்சக்கணக்கான பேர்களின் வாக்குரிமையைப் பறித்துத் தேர்தல் ஆணையம் பீகாரில் நடத்திய ஜனநாயகப் படுகொலையின் விளைவாக பா.ஜ.க கூட்டணி அங்கு இமாலய வெற்றியைப் பெற்று இருக்கிறது. அது போன்றதொரு நிலையை தமிழ்நாட்டிலும் ஏற்படுத்தி விட வேண்டும் என்று பா.ஜ.க திட்டமிட்டுள்ளது.

அதேநேரம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாத்திடும் பணியில் தி.மு.க தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு புறம் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணியைச் சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் தறுவாயில் அவசரகதியில் நடத்துவதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி வருகிறது. மறுபுறம் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணியை மேற்கொள்ளும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் உள்ளிட்டப் பிறபணியாளர்களுக்குத், தி.மு.க வாக்குச்சாவடி முகவர்கள் மூலம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தப் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் உள்ளிட்ட பணியாளர்களுக்குத் தேர்தல் ஆணையத்தால் போதுமான பயிற்சி கொடுக்கப்பட வில்லை. எந்த முன்தயாரிப்பும் இல்லாமல் அவர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். தற்போதைய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பவர்களில் ஏறத்தாழ 40 சதவிகிதம் பேர் மட்டுமே 2002 / 2005 வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். எஞ்சிய வாக்காளர்கள் தங்கள் வாக்கு நிலைக்குமா என்ற குழப்பத்தில் கேட்கும் சந்தேகங்களுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலரால் பதிலளிக்க முடியவில்லை. ஆனால் அப்பணிக்கு அவர்களை முறையாகத் தயார் செய்யாத தேர்தல் ஆணையமோ அவர்களுக்கு கெடுவிதித்துப் பணியை விரைந்து முடிக்குமாறு நெருக்கடி கொடுக்கிறது. "உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி" என்பதைப் போல வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தேர்தல் ஆணையம் மற்றும் வாக்காளர்கள் என்ற இருதரப்புக்கிடையே சிக்கித் தவிக்கிறார்கள். இந்த மன உளைச்சலைத் தாங்க முடியாமல் அண்மையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், வீடு வீடாகக் கணக்கெடுப்புப் பணியை மேற்கொள்ளும் போது பணிக்குச் சென்றவர்கள், அப்பகுதிக்குள்ளாகவே வீடு மாறிச் சென்றவர்கள் போன்றோர் படிவம் பெற முடியாமல் அவதிக்கு உள்ளானதை அறிந்த தமிழ்நாடு அரசு, அந்தந்த வாக்குச்சாவடியிலேயே வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்த முகாமை 5 நாட்கள் நடத்தி இருக்கிறது. அதன் விளைவாகக் கணக்கெடுப்புப் படிவத்தைப் பெற்றவர்கள் மற்றும் அதைப் பெற்று பூர்த்தி செய்து கொடுத்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருக்கிறது. பீகாரைப் போன்று தமிழ்நாட்டிலும் ஏராளமான வாக்காளர்களை, பட்டியலில் இருந்து நீக்கி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படும் பாஜகவுக்கு இது கடும்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பிரதமருக்குக் கேட்குமா?

விவசாய மக்களின் நண்பன் போலப் பேசிவரும் பிரதமர் மோடியின் பேச்சும், செயலும் அவ்வாறு அமையவில்லை.

விவசாய மக்களின் நலன் கருதி, கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 இல் இருந்து 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மோடிக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

அதை ஒன்றிய அரசும், அதன் பிரதமர் மோடியும் ஏற்கவில்லை. கோவை வேளாண் மாநாட்டுக்கு வந்த அவர் இதுகுறித்து வாயே திறக்கவில்லை.

நெல் கொள்முதலில் ஈரப்பதத் தளர்வு, கனமழையால் ஈரப்பதம் அதிகமாகி உள்ள நெல்லினைக் கொள்முதல் செய்ய வேண்டும் போன்ற தமிழ்நாட்டின் வேண்டுகோள்களை மோடி புறக்கணித்துள்ளார்.

தென்னாட்டின் மான்சிஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை-மதுரை வரையான மெட்ரோ ரயில் திட்டமும் நிராகரிக்கப் பட்டுள்ளது. ஆனால் எந்தவித உறுத்தலும் இன்றி கோவை வந்து சென்றுள்ளார் பிரதமர் மோடி.

அவர் வந்து சென்ற ஈரம் கூடக் காயவில்லை.



விவசாயமக்களைக் காய விட்டுவிட்டார்.

"தமிழ்நாட்டின் குரல் ஏன் பிரதமரின் காதுகளுக்குக் கேட்கவில்லை? விவசாயிகளின் அழுகுரல் ஏன் கேட்கவில்லை?" என்று முதலமைச்சர் விடுத்துள்ள கேள்விகளாவது, பிரதமருக்குக் ' கேட்குமா?.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே அ.தி.மு.க, அதன் நிர்வாகிகள் மூலம் இப்பணியில் ஆங்காங்கே குழப்பம் விளைவித்து வருகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை அமல்படுத்திய பா.ஜ.க கூட உச்சநீதிமன்ற வழக்கில் அதற்கு ஆதரவாகத் தன்னை இணைத்துக் கொள்ளாத நிலையில், அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்யும் அ.தி.மு.க தன்னை அந்த வழக்கில் இணைத்துக் கொண்டுள்ளது. அந்த வழக்கில் தி.மு.க வழக்கறிஞர் "தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் அதிவேகமாக இணைய இணைப்பு இல்லை எனபதால் கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும்" என்ற வாதத்தை முன்வைத்த போது அ.தி.மு.க வழக்கறிஞர் "தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் அதிவேக இணைய இணைப்பு உள்ளது" என்று மறுத்தார். ஆனால் ஊடகங்களில் பேசும் அ.தி.மு.க. வினரோ "எப்படி ஒரே நாளில் இவ்வளவு படிவங்களை இணையத்தில் பதிவேற்ற முடியும்" என்று கேள்வி கேட்கின்றனர். இதன் மூலம் அ.தி.மு.கவின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளது

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்திற்குத் தேர்தல் ஆணையம் முதலில் 11 அடையாள ஆவணங்களை மட்டுமே குறிப்பிட்டது. உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு ஆதார் 12 வது ஆவணமாகச் சேர்க்கப்பட்டது. ஆனால் 13 வது ஆவணமாக ஜூலை மாதம் 2025 இல் வெளியிடப்பட்ட பீகார் வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தப் பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது. இதன் மூலம் பீகாரைச் சேர்ந்த வாக்காளர்களைத் தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் இணைத்து அவர்களை எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் செய்ய பா.ஜ.க திட்டமிட்டுள்ளது என்ற ஐயம் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முறையானதிட்டமிடல்இல்லாமல்,அவசரகோலத்தில், தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் மூலம் எந்தவொரு தனிநபரின் வாக்குரிமையும் பறிபோய் விடக்கூடாது என்ற உயரிய நோக்கத்துடன் தி.மு.க உச்சநீதிமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் களமாடி வருகிறது. பா.ஜ.கவும் தேர்தல் ஆணையமும் இணைந்து மேற்கொள்ளும் இந்த சூழ்ச்சிகளை எதிர்த்து தமிழ்நாடு போராடும் ! தமிழ்நாடு வெல்லும் !! ●



வள்ளுவர் கோட்டம், புத்தகக் கண்காட்சி, 'கருஞ்சட்டைப் பதிப்பு'கத்திற்கு முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் வருகை தந்து பார்வையிட்டு, நூல்கள் வாங்கிச் சென்றார்கள்




'பெரியார் பெருந்தொண்டர்' ஐயா இராம.சுப்பையா அவர்களின் 118ஆம் பிறந்த, காரைக்குடி விழா மேடையில் துணை முதல்வருடன், பேரவைக் கல்வித் திட்ட இயக்குநர் ஆ.லாரன்ஸ் அவர்கள்.

# தமிழ்நாட்டை நிராகரிக்கும் மோடிக்குக் கண்டனம்!




**கோவையில் மோடிக்குக் கருப்புக் கொடி**

கடந்த 11 ஆண்டுகளாக ஒன்றியத்தை ஆட்சி செய்துவரும் பாஜகவின் பிரதமர் மோடி தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்தும், தமிழர்களைக் கேவலப்படுத்தியும் வருகிறார். வடநாட்டை வாழவைத்து, தமிழ்நாட்டைத் தேயவைக்கும் அவரின் போக்கு குறித்து தமிழ்நாட்டில் தலைவர்களும், மக்களும் கண்டனங்களை வீசி வருகிறார்கள்.

ஆனால் தமிழ்நாட்டைத் 'தலைகுனிய விடமாட்டேன்' என்று கல்வி, மருத்துவம், தொழில், வேலைவாய்ப்பு, மக்களின் வாழ்க்கைத்தரம் உள்ளிட்டவைகளைத் தமிழ்நாட்டில் உயர்த்திக் கொண்டு வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள். இன்று இந்திய ஒன்றியத்தில் மிக முன்னேறிய மாநிலமாக இருக்கிறது தமிழ்நாடு. இருந்தாலும் வழக்கம் போல இப்போதும் வஞ்சித்திருக்கிறது ஒன்றியம், கோவை-மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரிப்பதன் மூலம்.

மதுரையில், 11,360 கோடி ரூபாயிலும், கோவையில், 10,740 கோடி ரூபாயிலும், மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை, மாநில அரசு மூலமாக, மத்திய அரசிடம், 2024 பிப்ரவரியில் கொடுக்கப்பட்டது. பின்னர், மத்திய அரசு கேட்ட கூடுதல் ஆவணங்களுடன் திருத்தப்பட்ட அறிக்கை, 10 மாதங்களுக்கு முன்னர் வழங்கப் பட்டுள்ளது. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணியும் தொடங்கப்பட்டது. ஆனால், கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான திட்ட அறிக்கையை மத்திய அரசு திருப்பி அனுப்பி உள்ளது. அதற்காக ஒரு புஸ்வாணக் கதையை வேறு சொல்கிறது ஒன்றியம்.

மெட்ரோ இரயில் விடவேண்டுமானால் அங்கே 20 லட்சத்திற்குமேல் மக்கள் தொகை இருக்க வேண்டுமாம்.

அப்படியானால் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, உத்திரப் பிரதேச மாநிலம் கான்பூர், ஆக்ரா, மஹாராஷ்டிராவில் நாக்பூர், பீகாரில் பாட்னா உள்ளிட்ட நகரங்களில், 20 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை இருந்த போதிலும், அங்கு மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு எப்படி அனுமதி வழங்கியது? ஏன் தமிழ்நாட்டின் கோவை-மதுரை மெட்ரோ திட்டத்தை நிராகரித்தது ஒன்றியம்?

பிரதமர் என்பவர் ஒட்டு மொத்த இந்திய மாநிலங்களுக்கும் பொதுவானவராக இருக்க வேண்டுமே ஒழிய வடநாட்டுக்கு மட்டும் பிரதமராகஇருக்கமுடியாது,அப்படித்தான்அரசியல்சாசனம்சொல்கிறது. வடநாடுஇனிக்கிறது,தமிழ்நாடுகசக்கிறதுஎன்பதுபிரதமருக்குஅழகில்லை.

தமிழ்நாட்டிற்கு வரும்போது திருக்குறளைப் புகழ்ந்து தள்ளும் பிரதமர், அந்தத் திருக்குறளின் "நடுவு நிலைமை" யை படிக்கவாவது வேண்டும், அதற்குத் தமிழக பாஜக உதவ வேண்டும்.

**- எழில்**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian